**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 199/2019**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.09.2025 | தகப்பனார் பெயர்: | சோமு |
| பெயர்: | பிரகாஷ்<br>(PW– 2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| தொழில்: | VAO, நெப்பத்தூர் | வயது : | 36/2025 |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 10.09.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.31)**

1. என்னிடம் காட்டப்படும் சா.சா.1 ல் சர்வே எண்–256/2C என்பது புஞ்சையாகவும், அதன் பரப்பு 2.50.5 ெ ஹக்டேர் என்றால் சரிதான். அதில் ஜகதீசன், நாகராஜன், சிவகுமார் என்ற 3 நபர்கள் பெயர் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்தைப் பொறுத்து உரிமை இருந்த காரணத்தால் தான் பெயர்கள் பதிவாகியுள்ளது என்றால் UDR பதிவேட்டில் அவர்கள் பெயர் பதிவாகியுள்ளது. என்னிடம் காட்டப்படும் சா.சா.2 ஆவணத்தில் சர்வே எண்–256/2C என்பது 256/2C1, 256/2C2, 256/2C3 என்று உள்ளது என்றால் சரிதான். 256/2C1ல் 363 ச.மீ, 256/2C2ல் 373 ச.மீ, 256/2C3ல் 138 ச.மீ பதிவாகியுள்ளது என்றால் சரிதான்.

2. சர்வே எண்– 256/2C1, 256/2C2, 256/2C3 மூன்றிலுமே ஜகதீசன், நாகராஜன், சிவகுமார் என்று பெயர் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 256/2C2ல் J. ராஜேஷ் கண்ணன் என்பவர் பெயர் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். ஆனால் எந்த அடிப்படையில் அது பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்– 256/2C1ல் பட்டா எண் –342ல் J. கமலா என்றும் பதிவாகியுள்ளது என்றால் சரிதான்.

3. சர்வே எண்– 256/2C1ல் உரிமையாளர்களுடைய கோரிக்கை, பட்டா மாற்றம் செய்வதற்கான கோரிக்கை சம்மந்தப்பட்ட கோப்புகளின் விபரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பு 13.04.2010ல் எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் சா.சா.3 ('அ' பதிவேடு) ல் சர்வே எண்– 256/2C1 என்பதற்கு பழைய புல எண்–256/2C. சர்வே எண்– 256/2C1 என்பது ரயத்துவாரி புஞ்சையாக காட்டப்பட்டுள்ளது என்றாலும் அதன் விஸ்தீரணம் 3 ஏர்ஸ் 63 ச.மீ என்றாலும் சரிதான். அது ஜகதீசன் மற்றும் 2 நபர்கள் என்று பட்டாதாரர் பெயராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உரிமையாளர் என்ற அடிப்படையில்தான் இந்த பதிவு ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

4. தாவா புல எண் 256/2C1, 256/2C2 பொறுத்து வாதி கணேசன் பட்டா மாற்றம் செய்யக்கோரி எந்த கோரிக்கையும் வருவாய் துறையிடம் வைக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் வேறு யாருக்கும் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்றும் கோரிக்கை வைக்கவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**(முடிவு நேரம்– 12.53)**